
பத்தாமாண்டில்

பெருமையுடன்

உங்கள் இளந்தூது

இளந்தூது



துறைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
தமிழ்த்துறை
10.9.2001

# இளங்கணம்

முனைவர் துரை. குணசேகரன்,
தலைவர், தமிழாய்வுத்துறை,
தலைவர், துறையாய்வுக் குழு,
... கல்லூரி (தன்னாட்சி),
...-மயிலாடுதுறை



பத்தாம்
ஆண்டு
சிறப்பு
மலர்

# இளந்தூது

## - ஓர் அறிமுகம்

மாணவர்கள் எழுத்தாற்றலை வெளிக்கொணர
மாணவர்களாலேயே நடத்தப்படும்
ஒரு இதழே இளந்தூது.

1989 ஆம் ஆண்டு முன்னாள் வணிகவியல் மாணவரான திரு. இராதாகிருட்டிணன் அவர்களால் அன்றைய தமிழ்த்துறைத் தலைவர் தி.வ. காந்திமதிநாதன் மற்றும் தற்போதைய தமிழ்த்துறை தலைவர் முனைவர் கி. செம்பியன் அவர்களின் உறுதுணையோடு தொடங்கப் பெற்றது. பேராசிரியர் மு. வாசுதேவன் அவர்கள் ஒருங்கிணைப்பாளராக மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறார். மாத இதழாக தொடங்கப் பட்ட நம் இளந்தூது பருவ இதழாக மாற்றம் பெற்று புதுப் பொலிவுடன் வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏழாம் ஆண்டு வரை அச்சகத்திலே அச்சுக்கோர்க்கப்பட்டு வெளிவந்த நம் இதழ், எட்டாம் ஆண்டிலிருந்து கணிப்பொறி அச்சுக் கோர்வையில் (ஆப்செட் பிரிண்டர்ஸ்) உங்கள் பேராதரவை பெற்று வெற்றிகரமாக பத்தாம் ஆண்டை நிறைவு செய்து இருக்கிறது. திரை அச்சுக் கோர்வையிலேயே (ஸ்கிரீன் பிரிண்டிங்) அச்சிடப்பட்டு வந்த மேல் அட்டை இவ்வாண்டில் பலவண்ண கணிப்பொறி அச்சுக் கோர்வையில் (மல்ட்டி கலர் ஆப்செட் பிரிண்டர்ஸ்) வண்ணமயமாய் வெளிவந்து பத்தாம் ஆண்டில் ஒரு சரித்திரம் படைக்கிறது.

இனி சிறப்பு மலரின் பக்கங்களைப் புரட்டுவோம்



வி. இராதாகிருட்டிணன்,
முதல்வர்
அ.வ.அ.கல்லூரி (தன்னாட்சி)



இளநெஞ்சங்களின் கற்பனை வெளிப்பாடுகளை, வெளிக்கொணரும் இலக்கிய உலகில் இளந்தூது பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து பத்து ஆண்டுகள் நடந்துவந்துள்ளது. பத்தாவது ஆண்டு விழா கொண்டாடும் இந்நேரத்தில் நடந்து வந்த பாதையை பின்னோக்கிப் பார்க்கும் வேளையில் நாம் நடந்து முன்னேற வேண்டிய பாதையையும் உற்று நோக்க வேண்டும். நம்மை இந்த பத்து ஆண்டுகள் வளர்த்து ஆளாக்கிய ஆசிரியர் குழுவினையும், படைப்பாளிகளையும் நினைந்து போற்றுகிறோம். இந்த பத்தாவது ஆண்டுநிறைவை சிறப்பாக கொண்டாட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட ஆசிரியர் குழுவினையும், ஒருங்கிணைப்பாளர் திரு. வாசுதேவன் அவர்களையும் பாராட்டுவதோடு, விழா இனிது நடைபெறவும், இளந்தூது மேன்மேலும் வளர்ச்சியுற்று மாணவ மாணவியர்களின் எழுத்தாற்றலை வளர்க்க பெரிதும் உதவிட வேண்டும் என்ற என் அவாவையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்வாழ்த்துக்களுடன்,

வீர. இராதாகிருட்டிணன்,
முதல்வர்.

பேராசிரியர் ஜி. வாசுதேவன்
ஒருங்கிணைப்பாளர்
"இளந்தூது"



# தொடர்ந்து சாதனை புரிவாய்

தொடர்ந்தாற்போல் பத்தாண்டுகள்,
தவறாமல் வெளிவந்த இளந்தூதே !
உன்னுடைய சாதனைகள்,
உணர்ந்தவருக்கே புரியும்.
இளநெஞ்சங்களின் இலக்கிய தாகத்தை
இனிவரும் காலங்களிலும் இனிதே தீர்த்து
தொடர்ந்து சாதனைகள் பல புரிய
தேவனின் மனந்திறந்த வாழ்த்துக்கள்.

பேராசிரியர் ஜி. வாசுதேவன்



முனைவர் கி. செம்பியன் எம்.ஏ. பிஎச்.டி.,
பேருரையாளர் & தமிழ் துறைத் தலைவர்,
அ.வ.அ. கல்லூரி.



## வாழ்த்து மடல்

பேருந்துகளின் படிகளில் நந்திகள்-யார் ? யாருக்கும் நாணாத அரட்டையர்கள் - எங்கே? திரைப்படப் பித்தர்கள் - ஏன்? வகுப்பறை தூங்கிகள் - காரணம் ? கனமாகச் சிந்திக்க மறுப்பவர்கள் - அப்படியா ? எதிலும் அக்கறை அற்றவர்கள் - ஓகோ ! உடை அலங்கார மோகிகள் - ஆகா! கூட்டமாகக் கூடிநின்று பெண்களைக் கிண்டல்புரிபவர்கள் - போச்சுடா ! கண்டித்தால் தற்கொலை புரிந்துகொள்வேன் என மிரட்டுபவர்கள் -ஐய்யய்யோ! இவைதாம் கல்லூரி மாணவர்களைப் பற்றிப் பிறர் தீட்டும் சித்திரம் ! இந்தச் சூழ்நிலைகளில் அ.வ.அ. கல்லூரி மாணவர்கள் 'இளந்தூது' எனும் பத்திரிக்கையை நடத்திவருகின்றார்கள் என்பது எதிர் நீச்சல் அன்றோ ! அழிவாயுதம் (கஞ்சா, அபின், பான்பராக், பிரவுன் சுகர், மதுப்புட்டிகள், புகையான்கள்) ஏந்தி அல்லலுறும் கைகளில் அறிவாயுதம் ஏந்தி இன்புறுத்துகின்றார்கள் என்பது இறும்பூதன்றோ! தொடர்ந்து பத்தாண்டுகள் என்பதை எண்ணிப்பார்க்கப் பெருமிதம் அன்றோ! பத்தாண்டுகளுக்கு முன்பு வணிகவியல் பயின்ற மாணவ அன்பர் இராதாகிருட்டிணனே இதன் பிதா ! அந்தப் பிதாமகனை வாழ்த்துவோம் ! கல்லூரி

மாணவர்களிடையே இஃதொரு புதுமை ! இந்தப் புதுமையை வரவேற்று வழிப்படுத்தித் தொடரச் செய்த பெருமை முன்னை முதல்வர் இரத்தின பாலசுப்பிரமணியம் அவர்களைச் சாரும் ! அந்த ஆண்டுகளின் இதழியல் பாடத்தினை வணிகவியல் மாணவர்களுக்கு நடத்திய வலிமை முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர் தி.வ. காந்திமதிநாதன் அவர்களையும், இந்த வாழ்த்துச் செய்தியினை எழுதுபவரையும் சேரும். இதழியல் பாடப் புதிய அறிமுகம், ஒரு புதிய இதழை இக்கல்லூரிக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பெருமை எனக்குச் சான்றோன் எனக் கேட்டதாய் ! வளரும் பயிர் முளையிலே தெரியும் ! இளைய எழுத்தாளர்கள் இளந்தூதிலே தெரிவார்கள் ! அவர்கள் நாளைய "சாகித்திய அக்கதெமி" விருது வாங்குவார்கள் ! சிவனுக்குச் சூலாயுதம், முருகனுக்கு வேலாயுதம், திருமாலுக்கு சக்கராயுதம் மாணவர்களின் இந்த இதழாயுதம் ! இந்த ஆயுதம் பாதகங்களைக் கொல்லட்டும் ! சாதனைகளைச் சொல்லட்டும் ! வேதனைகளைத் தீர்க்கட்டும் ! இன்பங்களின் இனிய தென்றலாகட்டும் ! பல்லாண்டு தொடர்ந்து பருவ மழையாகிப் படரும் ஒளியாகட்டும் !



சிவ. அருள் முருகன்
ஆசிரியர்,
பத்தாம் ஆண்டு 'இளந்தூது'



அறிவுப் பெட்டகமே !
அறிமுகம் உனக்குத் தேவையில்லை.

அலர் பல இடைவரினும்
மலர் மணம் கமழ,
மூடு திரை துயர் விலக்கி
முழு மதியாய்
முகம் காட்டும் எங்கள் கருத்தொளியே !

தங்கு தடையின்றி
பொங்கு புகழ் விளங்க,
பத்தாண்டுகள் கடந்துவிட்டாய் ;
பத்தாம் ஆண்டில் முத்திரையும்
பதித்துவிட்டாய் ;
பல நெஞ்சங்களிலும் நிறைந்து விட்டாய் !

இனி வரும் காலங்களில்
விண் போற்ற நீ வளர,
உளமார வாழ்த்துகிறேன்.
வாழ்க ! வளர்க !!

என்றும் உனது
சிவ. அருள்முருகன்

ஆர். பாலசுப்பிரமணியன்
*முன்னாள் முதல்வர்*
*அ.வ.அ.கல்லூரி (தன்னாட்சி)*



கல்லூரி மாணவர்களாலேயே நடத்தப்பெற்று வரும் 'இளந்தூது' தனிச்சுற்று இதழ் பத்தாம் ஆண்டுமலர் வெளியிடப்பட இருப்பதை அறிய மகிழ்ச்சி. 1989ம் அண்டில் தொடங்கப்பட்ட போது மாணவர்கள் காட்டிய ஆர்வமும், ஒத்துழைப்பும் இன்றும் எனக்கு இனிய நினைவாக உள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் புதிய புதிய ஆசிரியர் குழு பொறுப்பேற்றுக் கொண்டு, அவர்களின் ஒத்துழைப்பில் எந்த வித தொய்வும் இன்றி "இளந்தூதை" வளர்த்தமை பாராட்டுக்குரியது. மாணவர்கள் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொண்டு, செய்யும் எந்தப் பணியும் சிறப்பாக அமையும் என்பதற்கு 'இளந்தூது' ஓர் சிறந்த உதாரணம். ஒவ்வொரு ஆண்டும் இவ்விதழின் ஆண்டு விழாக்களில் பங்கேற்று சிறப்பித்த புகழ்பெற்ற எழுத்தாளர்களும், பத்திரிக்கையாளர்களும் இந்த சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்து மகிழத்தக்கவர்கள்.

இதற்கு பொறுப்பானவர்களை வாழ்த்தி, மலர் இதழ் விரித்து மணம் பரப்பவும் உளமார வாழ்த்தி மகிழ்கிறேன்.

தொடர்க மாணவர்களின் சீரிய பணி



பேராசிரியர் தி.வ. காந்திமதிநாதன்
*முன்னைத் துணை முதல்வர் &*
*முன்னைத் தமிழ்த்துறை தலைவர்*
*அ.வ.அ.கல்லூரி (தன்னாட்சி)*



என் இனிய இளந்தூதே,

இன்று உனக்கு வயது பத்து.

நீ பிறந்த கதை தெரியுமா? நம்

கல்லூரி ஆண்டு மலருக்காகக்

கவின் மிகு படைப்புகளை வரவேற்றுச்

சுற்றறிக்கை வகுப்பறைகளை எட்டிப்பார்த்த

சில மணி நேரங்களில்

புத்தம் புதியனவாக மாணவரின் கைவண்ணக்

கதைகள், கவிதைகள், கட்டுரைகள்

அச்சில் காண மலர்ந்த ஆவல்கள்

இடநெருக்கடி இயலாமைகளால்

ஏமாற்றங்களாக வாடிவதங்கின.

வாடிய முகம் கண்ட என் வார்த்தைகள் :

"ஆற்றலும் ஆர்வமும் கொண்ட நீங்களே

இளமை மிளிர் இதழொன்று தொடங்கினால் என்ன?"

ஒரு கருத்து தெரிவிப்பே - அது நெஞ்சில்
கருத்தரிப்பாகும் என்று எதிர்பார்க்க வில்லை
நீ பிறந்து விட்டாய் !
பிறந்த பின்தான் பிள்ளைக்கு பெயர் வைப்போம் -
நீயோ
பிறக்கும் போதே பெயர் பெற்ற
பிள்ளையாக வந்து விட்டாய் - இன்று
வளர்ந்து விட்டாய் ! இன்னும் வளர்வாய்
நெஞ்சில் நிறுத்து.
உனக்கு மூப்பு வரலாம் - ஆனால்
உன்னை வளர்ப்பவர்கள்
என்றும் இளைஞர்களே ! - உன்
பத்தாண்டு விழாவில்
பல்லாண்டு பல்லாண்டு
வாழ வாழ்த்துகிறேன்.



பேராசிரியர் ஏ. இராஜமோகன்
*முன்னாள் முதல்வர்*
*அ.வ.அ.கல்லூரி (தன்னாட்சி)*



"இளந்தூது" இதழ் பத்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்தது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். மாணவர்கள் பத்தாம் ஆண்டு மலரைச் சிறப்பாக கொண்டு வருவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இத்தருணத்தில் என்னுடைய வாழ்த்தினை தெரிவித்துக்கொள்கிறேன். மலரும் மாணவ எழுத்தாளர்களுக்கு உதவிகளைச் செய்து வருகின்ற பேராசிரியர் வாசுதேவன் அவர்களின் உண்மையான, நேர்மையான முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

## Az. இராதாகிருஷ்ணன்
முதல் ஆசிரியர் "இளந்தூது"



தமிழ் உள்ளங்களே வணக்கம் !

1989 வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந்த பத்திரிக்கை இன்று 10 வருடங்களை தொட்டு வெற்றிகரமாக வெளிவந்து கொண்டு இருக்கிறது என்று நினைக்கும் பொழுது. இப்படியோரு செய்றகரிய செயலை செய்தது நாங்கள் மட்டும் தானா. இல்லை இல்லை. எனக்குப்பிறகு வந்த இளந்தூது ஆசிரியர்களும் இப்பத்திரிக்கை வெளிவர காரணமாய் இருந்த அந்நாளைய சொல் ஏர் உழுவர் பெருமக்களாகிய பேராசிரிய பெருமக்களும், முன்னாளைய முதல்வரும், எனது எண்ணத்திற்கு உரமிட்டு வளர்த்த எனது சக நண்பர்களுமே ஆவார்கள். "இன்று இது சாதாரணமாக தோன்றலாம், பிறகு நீங்களே ஆச்சரியபடுவீர்கள்" -என்று ஒரு நாள் மதிப்பிற்குறிய பேராசிரியர் கி. செம்பியன் ஐயா. கூறியது எங்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கும்தான். பொங்குமாம் கடலென பொங்கி எழுகின்ற இந்த மாணவ சமுதாயத்தில் - இது மற்றுமொரு புரட்சி ! இன்று எத்தனையோ பத்திரிக்கைகள் தோன்றி மறைகின்ற நேரத்தில் சரித்திர சாதனை !

இந்த சாதனை ஆயிரமாண்டு காலம் தொடர எல்லாம் வல்ல அருட்பேராற்றலை நினைத்து வாழ்த்துகிறேன்.

வாழ்க வளமுடன் !






சுபா
எழுத்தாளர்
சென்னை.

கல்லூரி பயணம் ஒரு நீண்ட உற்சாகமான ரயில் பயணம் போல தான் ஏறியதிலிருந்து இறங்கும் வரை சிலர்தான் நம்முடன் பயணம் செய்வார்கள் பலர் இறங்கி போவார்கள், பலர் புதிதாய் சேர்வார்கள் பல முகங்கள் மறந்து போகும், சில நினைவுகள் உயிர் மூச்சு உள்ளவரை நிலைத்திருக்கும்.

இப்படித்தானே பொதுவான தீர்மானம் இருக்கும். ஆனால் உங்கள் கல்லூரி இதை பொடிபொடியாக்கிவிட்டது. முக்கியமாய் இளந்தூது. கல்லூரி வாழ்க்கையில் ஒரு உயிரோட்டமுள்ள பகுதியை

நீங்கள் அரசவையாக்கிவிட்டீர்கள். அங்கிருக்கும் சிம்மாசனத்திற்கு அவ்வப்போது புதிய இளவரசர்கள், இளவரசிகளுக்கு பட்டாபிஷேகம் நடக்கிறது. ஆட்சி செய்யும் ஆசிரியர்க்குழு அன்றைக்கு ஒன்று இன்றைக்கு ஒன்று என்று மாறுபட்டு இருக்கிறது. ஆனால் அத்தனை ஆட்சியாளர்களும் ஒரே சிந்தனையுள்ளவர்களாக இருக்கிறீர்கள். அதிசயிக்கிறோம், ஆச்சரியப்படுகிறோம் !.

பத்து வருடங்களாக இளந்தூது வெவ்வேறு கரங்களில் வளர்ந்திருக்கிறது. அதற்கு வெவ்வேறு தாலாட்டுகள் பாடப்பட்டிருக்கின்றன. ஆனால், பக்குவம் கூடியிருக்கிறதே தவிர களைப்பு வரவில்லை இன்னும் அதே துள்ளலும், துடிப்புமாய் சீரிய சிந்தனையுடன் அறிந்து பரப்பி ஆக்கம் செய்து வருகிறது.

இதில் வருகின்ற கவிதைகள் எது பழையது? எது புதியது? எல்லாமே இன்றைக்கு மட்டும் புதிதாய் தெரியவில்லை. நாளைக்கும் புதிதாய் தெரியும். இதுதான் இளந்தூதுவின் ஸ்பெஷாலிட்டி ! எங்களுக்கும் ஏக்கமாக இருக்கிறது-மறுபடியும் கல்லூரியில் சேர்த்துக்கொள்வார்களா ?

மயிலாடுதுறை மட்டுமல்ல, நாளை தமிழ் நாடே உச்சரிக்கும் ஒரு பெயராக இளந்தூது திகழும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

வளம் பெற வாழ்த்துக்கள்

அன்புடன் . . .

சுபா



அறிவுமதி
பாடலாசிரியர்
சென்னை.

பத்தாமாண்டு விழாவிற்கு வருகை தந்த அறிவுமதியின் அறிவார்

கவிதை சிறப்பு மலருக்காக...

## கிளனூர் வாழ்வு

நடுமணல் நெடுக மணிலா கிடக்கையில்
குரங்குகள் வந்து குவியும் பாழ்வாய்க்கால்
புளியமரங்களில்.
கம்பு விளைந்து பரண்களில் 'டின்' அதிர்கையில்
கைகளால் தைத்த சுருக்குப் பைகள் விற்க
வருவார் எங்கிருந்தோ
மறக்கமுடியாத பல்வரிசைகளோடு
குறவன் குட்டைக்குள் ஊற வைத்த
கருவ கட்டைகளில் வெயில் காய்ந்த ஆமைகள்
வேகும் . . . கல்கூட்டிய அடுப்பில்
பன்றி மேய்த்து வந்த குறவனுக்கும்
முறம் விற்றுவந்த குறத்திக்கும்
சாராயம் கிளறும் பாடலுக்குமாக.
இடி மழை விடியலில் 'வெண்ணெய்த் திருடி' வீட்டுத்
தோட்டத்து
ஈசல் குழிகளில் நரிக்குறவர்கள் வைத்த மாட்டுவால் மயிர்க்

கண்ணிகளில்
இராவணாத்திக்குப் பதிலாய் பருந்து சிக்கிப்
படபடக்கும்.
கழைக்கூத்தாடியின் ஆட்டங்கள் இரசிக்கும்
கும்பலை விலக்கி உள்ளே வந்து
பொட்டலங்கட்டி மிதிக்கும் குழந்தையை
அவிழ்த்துவிடச் சொல்லி
கூவிக்கம்பை பொட்டி கண்ணீரோடு பதைப்பாள்
பூவாக்கிழவி.
துணிபொம்மைகளால் விளையாட்டுகாட்டி
கைச்சிலம்பால் இசைசெய்து
வீட்டுக்குவீடு வசூலித்த தானியங்களைத் மூட்டைக் கட்டி
குதிரை மேல் போட்டு நடப்பார்
உண்டுப்பிலி என்கிற சாதிப் பிள்ளை.
எந்த வீட்டு வாசலிலும் ஏமாற மாட்டார்
பூம் பூம் மாட்டுகாரர்.
ஊர் சுற்றிக் கூவி பாத்திரங்கள் வாங்கி
ஈயம் பூசிப் போனவர்களின்
அடுப்பில்
ரவைகள் சேகரிப்பதாய் ஆனது
நெய்வேலிக்காரனால் அளக்கப்பட்டுள்ள என்
கீணனூர் வாழ்வு.



சே.வெ. கிரி
இரண்டாம் ஆண்டு
பொறுப்பாசிரியர் 'இளந்தூது'

அருமை நண்பா ..
மடல் வரைய அழைத்தாய்
மையால் இருப்பதைவிட
மதியால் நிரப்பிய உன்
உழைப்புக்கு
மதிப்பளிப்பதாய் இருக்கட்டும் ..

உன் உழைப்பு
உன்னத்தின் பிரதிபலிப்பு ..
நீ நடந்து வந்த
பாதையை ..
அரிமா பார்வையில்
அறிகின்றேன் ..
கரடுமுரடாய் கற்களால்
நிரப்பியதை ..
பூப் பாதையாய் மாற்றினாய்

கடும் சொற்களால் ..
கண்டித்ததை ..
நல் அறிவுரையாய் ஏற்றாய்
சோர்வடைய செய்தவற்றை
சோதனையாய் ஏற்று
சாதனை கண்டாய் ..

நண்பா ..
இந்த படைப்பு
உன்னை நாளைய ..
சரித்திரமாக்கும் ..
நாளைய வரலாற்றின்
நாயகன் நீ
படைக்கும் சமுதாயம்
உன்னுடையது ..
நீயே சரித்திரமாவாய்
உன் பணியில்
உன்னோடு ..

என்றென்றும் அன்புடன் ..
உன்னுடன்
சே.வெ.கிரி



பிரியமானவர்களுக்கு...

வணக்கம்.

பத்தாவது ஆண்டு சிறப்பு விழா கொண்டாடு 'இளந்தூது'விற்கு வாழ்த்துக்கள்.

'வாள் முனையைவிட கூர்மையானது பேனா முனை' என் (வழக்கமான) வசனத்தைக் கூறி கொலைக் கருவியான வாளை பேனாவிற்கு இணையாக்க விரும்பவில்லை.

ஆக்கவும் அழிக்கவும் வல்லது பேனா.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு சிறு பொறியாக கிளம்பிய நம் இளந்தூது இன்று பெரும் சுடராக பிரகாசிப்பதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி 1992-93ம் ஆண்டில் இளந்தூது ஆசிரியர் குழுவில் இணை ஆசிரியராக செயலாற்றிய நினைவுகளை எண்ணி பெருமிதம் கொள்கிறேன்.

நூற்றாண்டு விழா காண எல்லாம் வல்ல இறைவனிடம் இறைஞ்சுகிறேன்.

என்றும் அன்புடன்,
(கி. ரமேஷ் குமார்)



எம். குருமூர்த்தி
முன்னாள் பொறுப்பாசிரியர்

அன்புடையீர்

வணக்கம் ! எங்களால் துவக்கப்பட்ட இளந்தூது இதழ் கடந்த பத்தாண்டுகளாக வெற்றிகரமாக செயல்பட்டு பதினோறாவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

வணிகவியல் படித்து வந்த எங்களுக்கு இதழியியலையும் ஊட்டியதால் வந்த தாக்கமே இந்த இளந்தூது. கடந்த பத்தாண்டுகளாக பல கதை கட்டுரை துணுக்கு செய்திகளை வழங்கி அதன் மூலம் நாமும் எழுத வேண்டும் என்ற எண்ணத்தை பல மாணவ, மாணவிகளுக்கு ஏற்படுத்திய அதில் வெற்றியும் கண்ட இளந்தூது இதழை வரும் காலங்களில் சிறப்பாகவும், புதுமையாகவும் நடத்தி வெற்றிகள் பல அடைய வாழ்த்துகிறேன்.

கோவி. ஸ்டாலின்
நான்காம் ஆண்டு பொறுப்பாசிரியர்

கடற்கரையில் விற்றவனும்
உனக்கு வாசிக்கத் தெரியுமா என்று கேட்கவில்லை..
நானும் இதில் கற்றுக் கொள்ள முடியுமா என்று கேட்கவில்லை..
அவன் விற்றதை நான் வாங்கிவிட்டேன்
முதலில் ஊதி, ஊதி இப்போது வாசித்து கொண்டிருக்கிறேன்.
இனி வித்வான்களின் புல்லாங்குழல் விற்பனைக்கு வரலாம்.

ப. மகேஷ் பாபு
ஆறாம் ஆண்டு ஆசிரியர்

## தர்மனின் பெயர் இனி மாற்றப்படும்

வரணாவதம் நகரில் நடந்த நிகழ்வுகளுக்காக ...
முதல் முறையாக உன்னிடம் பேசுகிறேன் ...
கள்ளும், கறியும் தருகிறோம்
கவின் மிகு மாளிகைக்கு வாருங்கள் என்றீர்கள் ...
சணலும், குங்கிலியமும், மெழுகும், சேர்த்து செய்த அரக்கு
மாளிகையாம்.
யாருக்குத் தெரியும். ஐந்து பேருக்கு மட்டும் தெரியும் கூடவே
உன் தாயும் வேண்டும் என்றீர்கள்.
வந்தோம் ! கள்ளும் கறியும் தந்தீர்கள் கூடவே மயக்கம்
மருந்தும் கலந்தீர்களோ ...
என்ன செய்தோம் நாங்கள் ஏன் இப்படி செய்தீர்கள் ..
அரக்கு மாளிகையில் நிகழ்ந்துவிட்ட நிகழ்வுகளுக்கு இன்று
வரை தீர்வு இல்லை.
உன் தாயோடு நீ தப்பிக்க என் தாயோடு நாங்கள் எரிந்தோமே
எரிந்த போது எங்கள் நெஞ்சம் எப்படி எரிந்திருக்கும்
தர்மனே மனித நேயத்தை எரித்த நீ இன்னும் உன் பெயரை
தர்மன் என்றே வைத்திருக்கிறாயே
இது நியாயமா ? இனி உன் பெயரின் முதல் எழுத்தாக 'அ'
அமையட்டும்.



## உணர்வுகள் ...



பூங்கோதையின் மதியநேரத்து குட்டித்தூக்கம் கலைந்தபோது மணி நாலேகால். ஐந்து மணிக்குத் தண்ணீர் பிடிக்கச் செல்லவேண்டுமென மூளை அனிச்சையாய் உணர்த்த, உடைதிருத்தி எழுந்தாள். பின்கட்டுக்குச் சென்று குவளையில் இருந்த நீர் எடுத்து முகத்தில் அடித்து அலம்பியபோது உடம்பு சிலிர்த்தது. இது பூங்கோதைக்கு ரொம்பப்பிடித்த விஷயம். நன்றாய் தூங்கியெழுந்து குளிர்ந்த நீரில் முகம் கழுவியவுடன், முகத்தில் ஒரு தெளிவு படரும். உலகத்திற்கு புதிதாய் வந்தமாதிரி தோன்றும். அதை அவள் அனுபவித்து ரசிப்பாள்.

பூங்கோதை அழகு. கண்களை உறுத்தாத இதமான அழகு. பிறை நெற்றியும், பெரிய விழிகளும், அளவாய் சதைபோட்ட கன்னங்களும், லிப்ஸ்டிக்கில்லாமல் சிவந்திருந்த உதடுகளும் அவளுக்கு இயல்பாய் ஓர் குடும்பப்பாங்கான முகத்தை கொடுத்திருந்தன.

பூத்துண்டால் முகம்துடைத்து கண்ணாடி முன் வந்து நின்றாள். ஆளுயர கண்ணாடி அப்பாவிடம் அடம்பிடித்து வாங்கியது. வீட்டில் யாரும் இல்லாதபோது அந்த கண்ணாடிதான் அவளுக்குத் தோழி. நேரம் போவது தெரியாமல் மணிக்கணக்காய் அதன் முன் நின்றிருக்கிறாள். அதனுடன் நிறைய பேசியிருக்கிறாள். பாடியிருக்கிறாள். எப்போதோ படத்தில் பார்த்த ஸ்டெப்பை ஞாபகப்படுத்தி ஆடிப்பார்த்திருக்கிறாள்.

தூங்கியெழுந்ததில் கன்னம் இன்னும் உப்பியிருப்பதாய் உணர்ந்தாள். கலைந்திருந்த தலை பிரித்து மீண்டும் வாரத் தொடங்கினாள். எட்டாம் வகுப்போடு படிப்பு நிறுத்தியதிலிருந்து

வெளியில் கிளம்புவது வெகுவாய் குறைந்திருந்தது.

அவ்வப்பொழுது உறவினர் வீட்டு விசேஷங்கள் எப்போதாவது தோழிகளுடன் உள்ளூர் டாக்கீஸ் சினிமா - அவ்வளவுதான். அவளுக்குப் பிடித்தமான, அவள் நிறத்திற்கு எடுப்பான மாம்பழநிற மற்றும் கருநீல பாவாடை தாவணிகள் மற்ற நாட்களில் எழுப்ப ஆளின்றி அலமாரியில் தூங்கிக் கொண்டிருக்கும்.

பின்னி முடித்த கூந்தலை முன்புறம் போட்டு அழகு பார்த்தாள். பின்னல் திருப்தியாய் இருந்தது. முகத்தை மறுபடி அழுந்தத் துடைத்து பவுடர் போட்டு சீராய் தடவினாள். கரிய விழிகள் விரித்து மையெழுதினாள். கண்கள் படபடக்கவிட்டு கண்ணாடி பார்த்தாள். ஸ்டிக்கர் பொட்டில் அவளுக்கு என்றும் நம்பிக்கையில்லை. ஒற்றை விரலில் குங்குமம் தொட்டு மற்ற நான்கு விரல்களில் முகம் தாங்கி புருவ மத்தியில் அழுந்தப் பொட்டிட்டாள்.

ஜாக்கெட்டிற்குப் பொருத்தமாய், மடித்து வைத்திருந்த தாவணி எடுத்து மாற்றிக்கொண்டாள். பக்கவாட்டிலும், நேராயும் கண்ணாடி முன் நின்றுபார்த்து முந்தானையை சரிசெய்தாள். கண்ணாடியை நெருங்கி, ஒரு சின்ன முடிக்கற்றையை வெட்கத்தில் முகம் சிவந்து இன்னும் சிரித்து ச்சீ..போ எனச் செல்லமாய் கண்ணாடி பார்த்து சிணுங்கிய போது மணி ஐந்து.

அடுக்களை பக்கம் பார்த்து அம்மா... தண்ணிக்கு போய்ட்டு வரேன்... என்று குரல் கொடுத்து, பித்தளை குடம் எடுத்து இடுப்பில் சாய்த்தாள். பளபளத்த அந்த பித்தளை குடம் அவளின் இடுப்பிற்கு அளவெடுத்து வார்த்ததுபோல் அம்சமாய் பொருந்தியது !

தெருவில் இறங்கி நடந்த போது அலுப்பாய் உணர்ந்தாள். இரண்டு தெருதள்ளி ஊருக்குப் பொதுவான தண்ணீர் குழாய். தூரம் பெரிய விஷயமில்லை. இவள் வீட்டுத் தெருவின் கடைசி வீட்டு



ஷண்முகம், தண்ணீர் குழாய்க்கு எதிர் டீக்கடையில் வேலையற்று அரட்டையடிக்கும் இவள் வயசு இளைஞர்கள், இவளைப்போல் தண்ணீர் எடுக்க வரும் பக்கத்து தெரு விஜயா. இவர்கள் தான் இவள் அலுப்பிற்கு காரணம். விஜயா இவளைப்போல் இல்லை. பூங்கோதையுடன் நட்பாய் பழகினாலும் இவளின் அழகு பார்த்து வெளிப்படையாகவே பொறாமைப்படுவாள். இவள் கவனிக்காத போது இவளையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பாள். இவையெல்லாம் பூங்கோதைக்குப் பிடிப்பதில்லை. ஒரு முறை எப்படி பூங்கோதை உடம்ப இப்படி அழகா வச்சிக்கிற... என முகம் சுளித்தாள். தன் அழகு கண்டு பொறாமைப் பட்டு தனக்கு ஏதாவது செய்துவிடுவாளோ என பயந்தும் உண்டு.

இப்படித்தான் கோடிவீட்டு ஷண்முகம். தினம் தினம் இவள் தண்ணீர் எடுக்கச் செல்லும் போது, தன் வீட்டு ஜன்னல் திறந்து உட்கார்ந்திருப்பான். தினமும் சூரியன் உதிக்கத் தவறினாலும் தவறலாம். இவன் மாலை ஐந்து மணிக்கு ஜன்னல் கம்பிகளுக்குபின் ஆஜர் ஆவது தவறாது. பூங்கோதைக்கு அவளை சுத்தமாய் பிடிப்பதில்லை. அவனின் பார்வை அத்தனை மட்டம். சில சமயம் இவளின் பார்வை பட்டால் அநாவசியமாய் விழிவான். இவள் முகம் சலித்து திரும்பிக் கொள்வாள்.

அப்புறம் டீக்கடை அரட்டைக் கும்பல், ஊர் பொதுக்குழாயின் நேர் எதிரே, அந்த நான்கைந்து பேரும் சின்ன வயதில், அந்த ஊர் பள்ளிக்கூடத்தில் இவளுக்கு பக்கத்திலமர்ந்து பாடம் படித்தவர்கள்தான். நம்ம ஊர் பண்பாடு இந்த சில வருடங்களில் அவளுடன் ஓர் பெரிய விலகலை அவர்களுக்கு ஏற்படுத்தி இருந்தது.

இவள் தண்ணீர் எடுக்க வருகையில் தான் "தண்ணி கொடம்

எடுத்து தங்கம் நீ நடந்துவந்தா..." என்று ஆடலுடன் பாடிக்காட்டுவார்கள். இன்னும் எத்தனையோ வகையான கிண்டல்கள் இவளுக்கு கோபத்தில் முகம் சிவக்கும். சிலசமயம், அப்பாவிடம் சொல்லி இவர்களை அதட்டலாமா என்று கூட யோசிப்பாள்.

இன்று ஷண்முகம் வீட்டை கடந்து செல்லும்போது, அதிசயமாய் ஜன்னல் சாத்தியிருந்தது. கழுதை எங்காவது ஊர்சுற்றப் போயிருக்கும், என நினைத்தவளாய் நிம்மதியுடன் நடந்தாள்.

விஜயா வீட்டில் அவளுடைய அம்மா தலைவாரியபடி வாசலில் அமர்ந்திருந்தாள். 'என்னக்கா.. விஜயா தண்ணிக்கு வரலையா ... ?' என்று கடமைக்கு விசாரித்தாள் பூங்கோதை. அவ... அவுங்க அத்தை வீட்டுக்கு போயிருக்கா. நாளன்னிக்குதான் வருவா... என்றாள் விஜயாவின் அம்மா.

இவளுக்கு இன்னும் நிம்மதி. தண்ணீருக்கு வரிசையில் இடம்பிடித்து குடம் வைத்தபோதுதான் கவனித்தாள். டீக்கடையில் அந்த நான்கைந்து பேர் இல்லை. தண்ணீர் பிடித்து திரும்பினாள். வரும்போது ஷண்முகம் வீட்டு ஜன்னல் மூடியிருந்தது.

இன்று அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. வக்கிரப்பார்வை ஷண்முகம், பொறாமை பிடித்த விஜயா, கிண்டலடிக்கிற டீக்கடை கும்பல் - யாரும் இல்லை. சந்தோஷித்த மனதுடன் வீட்டுப் படியேறினாள். இன்றைய முக்கால் மணிநேர அலங்காரம் வீணாகிவிட்டதோ என்ற உணர்வு அவளைச் மெல்லச் சூழ்ந்தது.

S. அருள் குமார்
ஏழாம் ஆண்டு இணை ஆசிரியர்





ஆர். ரியாஸ் அகமத்
டிசைனர்
எட்டாம் ஆண்டு

## தாய், குழந்தை - இளந்தூது

இளந்தூது என் வெற்றிப்படிகளை தாங்கி நிற்கும் தூண் ஒவ்வொரு வெற்றியாளரும் தன் வெற்றிக்கு காரணமான வெற்றிப்படியை விட்டுச் செல்கின்றான். ஆனால் என் வெற்றிக்க காரணமாக இருக்கும் வெற்றிப்படிகளை என்னுடனே எடுத்துச்செல்கின்றேன். வானத்தை நோக்கி...

மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரி மாணவ, மாணவிகளால் தயாரிக்கப்படும் பத்திரிக்கை இளந்தூது இப்போது இளந்தூதுவிற்கு பத்து வயது ஆகின்றது. 1989 ஆம் ஆண்டு திரு இராதாகிருஷ்ணன் தலைமையில், பேராசிரியர் திரு செம்பியன் அவர்களின் துணையுடன் ஆரம்பிக்கப்பட்டது. இளந்தூதுவின் எட்டாம் வயதில் 1995-96 ஆம் ஆண்டில் ஆசிரியர் திரு தர்மராஜன் இளந்தூவை நம்மிடம் ஒப்படைத்துச் சென்றார். இளந்தூது மீது எல்லோருக்கம் அளவு கடந்த பாசம், அன்பு எல்லாம். 1996-97 ஆம் ஆண்டு

ஆசிரியர் திரு அன்பரசன், இணையாசிரியர் திரு செந்தில், இளந்தூது மேன்மேலும் சிறப்பாகத் திகழ நிறையப் பக்கங்களுடன், ஆப்செட் முறையிலும் இளந்தூதுவை அறிமுகப்படுத்தினார்கள் இதன் மூலம் இளந்தூதுவிற்குப் பாராட்டும், புகழும் கிடைத்தது.

இளந்தூது குடும்பம் தங்கள் படிப்பையும் கவனித்துக்கொண்டு இலக்கிய ஆர்வத்தையும் இளந்தூது மூலம் வளர்த்துக்கொண்டோம். இளந்தூது மாணவர்களின் இலக்கிய தாகத்திற்கு பாலமாகவும், வடிகாலாகவும் திகழ்கின்றது. நான் இளங்தூதுவில் இணைய காரணமாக இருந்த நண்பர் திரு தி.சுந்தரமூர்த்தி அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தாய் வயிற்றில் குழந்தை வளரும் சமயத்தில் ஆபத்து ஏதும் நிகழாமல் தாய் ஒவ்வொரு நிமிடமும் கவனத்துடன் செயல்படுகின்றாள் அதுபோல் இளந்தூதுவை கவனத்துடன் தயாரித்து வெளியிடுகின்றோம். இரண்டிற்கும் ஒரே வித்தியாசம், தாய்க்கு ஏற்படுவது பிரசவம், பத்திரிக்கைகளுக்கு ஏற்படுவது பிரசுரம்.

இலக்கியத்தில் இசைபாடும் இளந்தூது இன்னும் மேன்மேலும் வளர வாழ்த்தும் இலக்கிய ஆர்வன்.



*பி. சுமந்தனன்*
*எட்டாம் ஆண்டு இணை ஆசிரியர்*

என் தாயை வாழ்த்த வார்த்தைகள் இல்லை. ஏனென்றால் எனக்கு இளந்தூது கற்பித்தது ஏராளம். என்னை சேய் போல் காத்த இளந்தூது மேன் மேலும் வெளிவந்து கல்லூரியில் சரித்திரம் படைக்க இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

*தி. சுந்தரமூர்த்தி*
*முன்னாள் மாணவர்*

இளந்தூது எங்கள் உணர்வுப் பூர்வமான நண்பன், கல்லூரியில் அறிமுகமான நட்பு . . . கல்லூரி நட்புக்கில்லை முற்றுப்புள்ளியே என்ற வாலியின் வார்த்தைகளை ஒப்பிட்டுப் பார்க்கின்றேன். மூன்று வருட நட்பின் ஆழத்தால், பத்தாம் ஆண்டில் எங்கள் நண்பனை பார்ப்பதில் எனக்கும் மட்டும் அல்ல எங்கள் அனைவருக்கும் அளவில்லா மகிழ்ச்சி. உலகில் ஜனனம் உள்ளமட்டும் இளந்தூதுவின் பயணம் தொடர மனமார வாழ்த்துகின்றேன்.

ஜி. அமலன் ராபர்ட்
பத்தாம் ஆண்டு இணை ஆசிரியர்

பத்தாம் ஆண்டு சிறப்பு விழா கொண்டாடும் ந இளந்தூது மேலும் பல ஆண்டுவிழாக்களை கொண்டா சிறக்க இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

ஜி. சித்ரா
பத்தாம் ஆண்டு இணை ஆசிரியர்

படைப்புகள் பல தந்து எனை ஒரு படைப்பாளியாக்கி நம் இளந்தூது இன்னும் பல படைப்பாளிகளை உருவாக்க மேலும் வளர வாழ்த்துகிறேன்.

ஆர். கணபதி ராஜா
பத்தாம் ஆண்டு பொறுப்பாசிரியர்

பத்தாண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து இமாலைய சாதனை புரிந்த இளந்தூதுவில் பொறுப்பாசிர்யர் மற்றும் டிசைனராக இப்பத்தாம் ஆண்டில் பணி புரிவதில் பெருமைகொள்கிறேன். இளந்தூதுவின் வளர்ச்சிக்கு வாழ்த்துக்கள்.



ச. ஷோபா
பத்தாம் ஆண்டு பொறுப்பாசிரியர்

ஒளி பொதிந்த கண்கள். அமைதி படுத்தும் புன்னகை தோய்ந்த, தெய்வீகமான முகம். மெய் மறக்க வைக்கும் குரல் - இவை தான் பாடகி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் புகழுக்கு மூலதனம்.

தனது 15 வது வயதிலேயே 'மீரா' திரைப்படத்தில் அற்புதமாக நடித்து அனைவரையும் உருகவைத்த எம்.எஸ். 'நந்தனார்' படத்தில் நாரதர் வேடத்தில் நடித்து, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார் அவர்.

சபர்மதி ஆசிரமத்தில் மகாத்மா காந்தி, "அவள் ஒரு தெய்வீகப் பிறவி " என்று அவரது இசைத்திரமையை பாராட்டினாராம். அவரது குரல் இன்பம் கேட்ட சரோஜினி தேவி "எனது கவிக்குயில் பட்டத்தை தருகிறேன்" என்றாராம். இதுபோல் அவர் உலகளவில் பெற்ற பட்டங்களும் பெருமைகளும் எண்ணற்றவை.

இசைத்துறையில் வளர்ந்து வரும் இளைஞர்களுக்கு, சிறந்த வழிகாட்டி எம்.எஸ். அவார். 1997 ஆம் வருடத்தில் பாரத ரத்னா விருதை இவருக்கு வழங்கி அரசு இவரை பெருமை படுத்தியது.

ஆர். கே. அன்பரசன்
பத்தாம் ஆண்டு ஆசிரியர் குழு உறுப்பினர்

ஈரைந்து ஆண்டுகளாய்
ஈடில்லா பலரிணைந்து
ஊறொன்று இல்லாமல்
உயிரெனப் போற்றிய 'தூதே'!

அகவை பத்தில் - ஆற்றல்நிறை
அய்யா வாசுதேவனவர் கைப்பிடித்து
ஆசிரியராய் அருள்முருகன் வழிநடத்த
அற்புதமாய் நடையிடும் அதிசியமே!

ஒன்பதாமாண்டு நிறைவில்
உன்னுடன் யான்
ஒன்றிய நினைவுகளோடு
உன்னைத் துதிக்கின்றேன்...

விண்ணாய் விரிந்து நீ பரவ - தமிழ்ப்
பண்ணாய் என்றும் புகழ்மணம் வீச
மண்ணில் யான் வாழுங்காலம் மட்டும்
கண்ணில் வைத்துப் போற்றிடுவேன்-நின்னை.
உன்னோடு தொடரும் என் பயணம்...



முத்து. செந்தில் குமார்
பத்தாம் ஆண்டு ஆசிரியர் குழு உறுப்பினர்

என்னவளே!
இளம் தூதே!

உலகை விட்டு
உயிர் பிரியலாம்
ஆனால் - உன்னோடு
நான் கலந்த காலங்கள்
என் நெஞ்சை விட்டு
பிரியாது
என்றுமே என்னவளாய்!
இனியவளாய்!
நீ வாழ இறைவனையும்
வளர்க்க, ஜீ.வி. யத்தையும்
என் இளையோரையும் வேண்டுகின்றேன்.

இப்படிக்கு
என்றும் உன்னவன்.

ஞான. வித்யா
பத்தாம் ஆண்டு ஆசிரியர் குழு உறுப்பினர்

நிறங்களாய் இருப்பதில்
எத்தனை சந்தோஷம் ஸ
பூக்களின் அழகாய்,
வண்ணத்துப் பூச்சியின் அடையாளமாய்,
உணர்ச்சியின் வடிகாலாய்...
நிறங்களாய் இருப்பதில்தான்
எத்தனை சந்தோஷம் !!
நிறங்களுக்குதான் புரிவதில்லை
நிறமாய் இருப்பதன் மகிழ்ச்சி.

சீ. கீதா
பத்தாம் ஆண்டு ஆசிரியர் குழு உறுப்பினர்

உணவு, உடை, உரையுள் இவை மூன்றும் நம்மை உயிரோடு வாழ வைக்கிறது; ஆனால் நம்மை உறவோடு வாழ வைப்பது புரிதல் உணர்வுதான். நம் வீட்டில் இருக்கும் அப்பா, அம்மா, தம்பி, தங்கை எல்லோரையும் ஒரு மெல்லிய சங்கிலியாய் கட்டி வைத்திருக்கும் அன்பிற்கு அடிப்படையே இந்த புரிதல் தான். யோசித்து பாருங்கள் நம்மால் புரிந்து கொள்ள முடியாதவர்களிடமோ, நம்மை புரிந்து



கொள்ளாதவர்களிடமோ, நமக்கு நிச்சயமாக அன்பு தோன்றுவதில்லை. சரி ஒருவரை நாம் எப்படி புரிந்து கொள்வது ? அவர்களின் பார்வைகளிலிருந்தா ? அவர்களின் அசைவுகளிலிருந்தா ? அவர்களின் செய்கைகலிலிருந்தா ? அல்லது உச்சரிக்கிற அந்தக் கணமே காற்றில் கரைந்து போகிற வார்த்தைகளிலிருந்தா ? இவை எல்லாவற்றையும் விட அவர்களின் மனதை புரிந்து கொள்ள தெரிந்திருக்க வேண்டும்.

வாழ்க்கையை இனிமையாக்கிக் கொள்ள நாம் நம்மிடையே பரஸ்பரத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். ஒருவர் தவறே செய்திருந்தாலும் 'நீ செய்தது தவறு' என்று எப்போதும் கூறாதீர்கள். மாறாக 'எது சரி?' என்று அவர் புரிந்துகொள்ள உதவி செய்யுங்கள். இது இல்லத்தில் இனிய உறவு முறைக்கு உதவும். நம் வாழ்க்கை என்பது நந்தவனம் போன்றது. இந்த நந்தவனத்தில் இருக்கும் பூக்கள் பலவிதம். அவை ஒவ்வொன்றும் ஒருவிதம். அவைகளின் தன்மைகளைப் புரிந்து கொண்டு அவைகளை இரசித்து மகிழ்வோம்.



(26)

பி. கிருத்திகா
பத்தாம் ஆண்டு ஆசிரியர் குழு உறுப்பினர்

ஆறு மாதத்திற்கு
ஒரு முறை வந்தாலும்
பௌர்ணமியாய்
நீ வருவாய் !

எங்கள்
கவிதைகளை
அரங்கேற்றும்
மேடையாக
நீ வருவாய் !

எங்கள் எண்ணங்களை
அறிமுகம் செய்யும்
இயக்குநராக
நீ வருவாய் !

பத்தாம் ஆண்டிலிருக்கும்
இளந்தூதே
எங்கள் பாச உணர்வினை
எடுத்துச் சொல்லும்
புதுக் கவிதையாக
நீ வருவாய் !

மேலும் வளர்வாய் !



முனைவர் துரை. குணசேகரன்,
தலைவர், தமிழாய்வுத்துறை,
தலைவர், துறையாய்வுக்குழு,
ஏ.வி.சி. கல்லூரி (தன்னாட்சி),
மன்னன்பந்தல்-மயிலாடுதுறை